بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *29/10/2021* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝١ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝٢ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝٣ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝٤ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝٥

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝٦ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝٧

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொர்க்கத்திற்கான நற்செய்தி வழங்கியிருந்த 10 நபர்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் போக, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), உஸ்மான் (ரலி), அலீ (ரலி), தல்ஹா (ரலி), ஸுபைர் (ரலி), அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி), சஃது பின் அபீ வக்காஸ் (ரலி), சயீது பின் ஸைது (ரலி) மற்றும் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) ஆகியோரும் அடங்குவர்.

ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் மதீனாவின் ஒரு தோட்டத்தில் இருந்தேன். அங்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் வந்த போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்ளின் வழிகாட்டலுக்கு இணங்க நான் அவர்களுக்கு சொர்க்கத்திற்கான நற்செய்தியை வழங்கினேன். அதைக் கேட்டு அவர்கள் அல்ஹம்துலில்லாஹ்! என்று கூறினர். ஆனால், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ‘அவருக்கு ஏற்படவிருக்கும் ஓர் இன்னல் இருப்பினும் அவருக்கு சொர்க்கத்திற்கான நற்செய்தி வழங்குவீராக!’ என்று கூறினார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் அல்ஹம்துலில்லாஹ்! என்று கூறினார்கள். பிறகு, ‘இன்னலிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு அல்லாஹ்விடமே உதவி கோர முடியும்’ என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூ ஹுரைரஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருமுறை நான் உறங்கிக் கொண்டிருந்தேன். அப்போது நான் என்னை சொர்க்கத்தில் ஒரு மாளிகைக்கு அருகில் காணப்பெற்றேன். விசாரித்த போது அந்த மாளிகை ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களுடையது என்பது தெரிய வந்தது. எனக்கு அவர்களின் தன்மானம் குறித்த சிந்தனை வந்தவுடனேயே நான் திரும்பி வந்து விட்டேன். இதைக் கேட்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அழுதார்கள். மேலும், ‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் தங்களிடம் தன்மானத்தை வெளிப்படுத்துவேனா! தாங்கள் ஏன் திரும்பி வந்து விட்டீர்கள்? பரக்கத்தை வழங்கியிருக்கலாமே!’ என்று கூறினார்கள். ஹஸ்ரத் அபூ ஸயீது குத்ரீ (ரலி)

அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இல்லிய்யூன் (மற்றவர்களை விட உயர்ந்த தரத்தில் இருக்கும்) மக்களிலிருந்து யாராவது ஒருவர் சொர்க்கவாசிகளை எட்டிப்பார்ப்பார். அப்போது அவரது முகத்தின் காரணமாக சொர்க்கம் பொலிவுற்று திகழும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் அந்த மக்களைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் நபிமார்கள் மற்றும் தூதர்கள் தவிர, சொர்க்கத்தின் முன்னவர் மற்றும் பின்னவர் ஆகிய பெரிய வயது மக்கள் அனைவரின் தலைவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் அபூ ஹுரைரஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உமர் பின் கத்தாப் சொர்க்கவாசிகளின் விளக்காவார்கள். ஹஸ்ரத் உக்பா பின் ஆமிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனக்குப் பிறகு யாராவது நபி இருந்திருந்தால், கண்டிப்பாக உமர் பின் கத்தாப் இருந்திருப்பார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களும் ஹஸ்ரத் அபூ ஹுரைரஹ் (ரலி) அவர்களும் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'எனது சமுதாயத்தில் யாராவது ஒருவர் முஹத்தஸாக இருக்கிறார் என்றால், அவர் உமர் பின் கத்தாப் ஆவார்.' யாருக்கு அதிகமாக இல்ஹாம்களும் ஆன்மீகக் காட்சிகளும் கிடைக்கப் பெறுகின்றனவோ அவர்கள் முஹத்தஸ்மார்கள் ஆவார்கள். பிறகு, கூறினார்கள்: உங்களுக்கு முன் இருந்த இஸ்ரவேலர்களில், நபியாக இல்லாமலிருந்தும் அல்லாஹ் அவர்களுடன் உரையாடிவந்த மக்களும் இருந்தார்கள். எனது சமுதாயத்திலும் அவர்களில் ஒருவர் இவ்வாறு இருக்கிறார் என்றால், அவர் உமர் ஆவார்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** இறைவன் எப்போதும் உவமைகளைக் கையாளுகின்றான். இயல்பு, தனிச்சிறப்பு மற்றும் திறமையின் அடிப்படையில் ஒருவரின் பெயரை மற்றவருக்கு வழங்கி விடுகின்றான். ஒரு ஹதீஸுக்கு ஏற்ப, எவருடைய ஆன்மீக நிலை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் ஒத்ததாக ஆகிவிடுகின்றதோ, அவர் தேவையின் போது முஹத்தஸ் ஆகிவிடுவார். ஆக, இந்த எளியவனுக்கும் ஒருமுறை இவ்வாறு இல்ஹாம் வந்தது:

اَنْتَ مُحَدَّثُ اللّٰہِ فِیْكَ مَادَّةٌ فَارُوْقِیَّةٌ

அதாவது, நீர்! அல்லாஹ்வின் முஹத்தஸ் ஆவீர். உம்முள் ஃபாரூக்கிய தன்மை உள்ளது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் யமாமா போரில், திருக்குர்ஆனை மனனம் செய்த ஹாஃபிஸ்மார்கள் எழுபது பேர் ஷஹீதான போது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் திருக்குர்ஆனைப் பாதுகாப்பதற்கும் ஒன்று திரட்டுவதற்கும் ஆலோசனை வழங்கினார்கள். பிறகு, ஸைது பின் சாபித் (ரலி) அவர்கள் ஒன்று திரட்டும் பணியைத் துவங்கினார்கள்.

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் திருக்குர்ஆன் மனனம் செய்தது குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:-** ஹஸ்ரத்

அபூஉபைதா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத் செய்த சஹாபாவில் அபூபக்ர் (ரலி), உமர் (ரலி), உஸ்மான் (ரலி), அலீ (ரலி), தல்ஹா (ரலி), சஃது (ரலி), இப்னு மஸ்ஊத் (ரலி), ஹுஸைஃபா (ரலி), சாலிம் (ரலி), அபூஹுரைரஹ் (ரலி), அப்துல்லாஹ் பின் சாயிப் (ரலி), அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) மற்றும் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) ஆகியோர் திருக்குர்ஆனை மனனம் செய்திருந்தது நிரூபணமாகிறது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய கருத்தை ஒத்ததாக சில வஹிகள் இறங்கின. சிஹாஹ் சித்தா (எனப்படும் ஆறு ஹதீஸ்) நூல்களிலிருந்து, மூன்று விஷயங்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய கருத்து ஒருமித்ததற்குச் சான்று கிடைக்கிறது. எனினும், நாம் சிஹாஹ் சித்தாவின் இந்த அறிவிப்புகளை ஓரிடத்தில் ஒன்று திரட்டி பார்த்தோமேயானால், அவற்றின் எண்ணிக்கை ஏழு வரை செல்கிறது. சஹீஹ் புகாரியில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிப்பு வருகிறது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: மூன்று விஷயங்களில் எனது கருத்து எனது இறைவனின் விருப்பத்திற்கு ஏற்ப அமைந்து இருக்கிறது. நான், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாம் இப்ராஹீம் (அலை) அவர்கள் நின்ற இடத்தைத் தொழும் இடமாக ஆக்கிக் கொண்டால் என்ன!' என்று கேட்டேன். அப்போது,

وَاتَّخِذُوْا مِنْ مَّقَامِ اِبْرٰهٖمَ مُصَلًّى

என்ற வசனம் இறங்கியது. நான், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் தங்களது மனைவிமார்களுக்கு பர்தா அணியுமாறு ஆணையிட வேண்டும்; ஏனெனில், நல்லவர்கள் தீயவர்கள் என அனைவரும் அவர்களுடன் உரையாடுகிறார்கள்' என்று கூறினேன். அப்போது பர்தா குறித்த வசனம் இறங்கியது. பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மனைவிமார்கள் தன்மானம் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக (ஒருவிஷயத்தில்) ஒருமித்த போது, நான் அந்த மனைவிமார்களிடம் (அவர்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மகளும் இருந்தார்கள்) கூறினேன்: ஒருவேளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களுக்கு மணவிலக்குக் கொடுத்து விட்டால், அன்னாரின் இறைவன் உங்களுக்கு பதிலாக உங்களை விடச் சிறந்த மனைவிமார்களை அன்னாருக்கு வழங்கிவிடுவான் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அப்போது இந்த வசனம் இறங்கியது:

عَسٰى رَبُّهٗۤ اِنْ طَلَّقَكُنَّ اَنْ يُّبْدِلَهٗۤ اَزْوَاجًا خَيْرًا مِّنْكُنَّ

அதாவது, அவர் உங்களுக்கு மணவிலக்குக் கொடுத்து விட்டால், அவருக்கு அவரது இறைவன் உங்களுக்குப் பதிலாக உங்களை விட மிகச் சிறந்த மனைவிகளை வழங்கிடலாம்.

சஹீஹ் முஸ்லிமில் நயவஞ்சகர்களின் ஜனாஸாவைத் தொழாதது தொடர்பாக, திருக்குர்ஆன் வஹியுடன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கருத்து ஒற்றுமை காணப்படுகிறது. மது ஹராமாக்கப்பட்டது தொடர்பாக திருக்குர்ஆன் வஹியுடனான ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கருத்து ஒற்றுமை ஸுனன் திர்மிதியில் காணப்படுகிறது. சிஹாஹ் சித்தாவில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த

ஒற்றுமைகள் போக, இன்னும் பல ஒற்றுமைகளை வாழ்க்கை வரலாற்று நூலாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ஆக, அல்லாமா ஸுயூத்தீ அவர்கள் ஏறத்தாழ 20 ஒற்றுமைகளைக் கூறியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** சஹாபாவில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அந்தஸ்து எந்த அளவுக்கு மேலோங்கி இருந்தது என்றால், சில வேளை அவர்களின் கருத்துக்கு ஏற்ப திருக்குர்ஆன் இறங்கி வந்தது. அவர்கள் ஹக்கில் இந்த ஹதீஸ் உள்ளது: ஷைத்தான் உமரின் நிழலைக் கண்டு ஓடுகிறான். இரண்டாவது இந்த ஹதீஸ் உள்ளது: எனக்குப் பிறகு யாராவது நபி இருந்தால் உமராக இருப்பார். மூன்றாவது இந்த ஹதீஸ் உள்ளது: முன்சென்ற சமுதாயங்களில் முஹத்தஸ்மார்கள் இருந்திருக்கிறார்கள். இந்த சமுதாயத்தில் ஒருவர் முஹத்தஸாக இருக்கிறார் என்றால் அவர் உமர் ஆவார்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஒரு சஹாபி அப்துல்லாஹ் பின் ஸைது (ரலி) அவர்களுக்கு அல்லாஹ் வஹியின் மூலமாக பாங்கைக் கற்றுக் கொடுத்தான். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ் எனக்கும் இதே பாங்கைக் கற்றுக் கொடுத்திருந்தான். ஆனால், இந்த விஷயத்தை இன்னொரு நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறிவிட்டாரே என்பதற்காக இருபது நாள்கள் வரை நான் மௌனமாக இருந்தேன். ஸுனன் திர்மிதியுடைய ஓர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தமது கனவைக் கூறிய போது அன்னார், 'இந்த விஷயம் இன்னும் உறுதியாக உள்ளது. இப்போது மேற்கொண்டு சான்றளிக்கப்பட்டு விட்டது' என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எவ்வாறு கண்ணியமும் மரியாதையும் வழங்கி வந்தார்கள் என்பது தொடர்பாக ஹஸ்ரத் இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கிறார்கள்.** அவர்கள் அதாவது, ஹஸ்ரத் இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஒரு பயணத்தில் இருந்தார்கள். மேலும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஓர் ஒட்டகத்தின் மீது பயணித்திருந்தார்கள். அது வேகமாக ஓடக்கூடியதாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பயண விலங்கை முந்திச் சென்று கொண்டிருந்தது. அவர்களின் தந்தை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவர்களிடம், 'அப்துல்லாஹ்வே! எவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முந்திச் செல்லக்கூடாது' என்று கூறிவந்தார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ஒருமுறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இல்லத்திற்குச் சென்றார்கள். அப்போது பாயில் படுத்திருந்ததன் காரணமாக பாயின் அச்சு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முதுகில் பதிந்திருந்ததைப் பார்த்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'சீஸர் மற்றும் கிஸ்ராவோ நிம்மதியான வாழ்வைக் கழிப்பார்கள்; தாங்கள் வேதனையில் கழிக்க வேண்டுமா?' என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'எனக்கு இந்த உலகத்தோடு என்ன இருக்கிறது! ஒருவர் கடுமையான வெயிலில் ஒரு பெண் ஒட்டகத்தின் மீது சென்று கொண்டிருக்கிறார். மதிய

வெயிலின் வெப்பம் அவருக்குக் கடுமையான வேதனை அளிக்கிறது. அவர் அந்தப் பயணவிலங்கின் மீது அமர்ந்தவாறே இளைப்பாறுவதற்காக ஒரு மரத்தின் நிழலின் கீழ் தங்கிவிடுகிறார். பிறகு, சில நிமிடங்கள் கழித்து அதே வெப்பத்தில் தனது பயணத்தைத் தொடர்கிறார். எனது உதாரணம் அந்தப் பயணியைப் போன்றது' என்று கூறினார்கள்.

ஒருமுறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் உம்ராவை நிறைவேற்றுவதற்கு அனுமதி கோரினார்கள். அப்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுமதி அளித்து விட்டு இவ்வாறு கூறினார்கள்: 'என்னுடைய சகோதரரே! உம்முடைய துஆவில் எம்மை மறந்து விட வேண்டாம்.' ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இது எத்தகைய வாக்கியம் என்றால், ஒருவேளை எனக்கு இதற்கு பதிலாக முழு உலகமும் கிடைத்துவிட்டாலும் இவ்வளவு மகிழ்ச்சி ஏற்படாது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வஃபாத்தின் போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்னார் உயிருடன் இருக்கிறார்கள் என்றும் மீண்டும் வருகை தருவார்கள் என்றும் எண்ணினார்கள். மேலும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இதற்கு மாற்றமாகக் கூறுபவருடைய தலை சீவுவதற்கு ஆயத்தமாக இருந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அனைத்து சஹாபாவுக்கும் முன் இந்த வசனத்தை ஓதினார்கள்:

وَمَا مُحَمَّدٌ إِلَّا رَسُولٌ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ

ஆக, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: எனது பாதங்கள் நடுங்கிப் போயின. நான் துக்கம் தாளாமல் தரையில் விழுந்து விட்டேன்.

எனவே, யாராவது ஒரு நபி உயிரோடு இருந்திருந்தால், இந்த ஆதாரத்தைக் கொண்டு விளக்கியது சரியாக இருந்திருக்காது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இப்போது உயிருடன் வானத்தில் இருக்கிறார்களே! பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏன் உயிருடன் இருக்க முடியாது?' என்று கேட்டிருக்கலாம். ஆனால், அனைத்து சஹாபாவின் மௌனம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வஃபாத் ஆகிவிட்டார்கள் என்பதற்குச் சான்றளிக்கிறது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றி வந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அஸ்வத் கல்லைப் பார்த்து, 'ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உன்னை முத்தமிடுவதை நான் கண்டிருக்காவிட்டால், பிறகு ஒருபோதும் உன்னை முத்தமிட்டிருக்க மாட்டேன்' என்று கூறி வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களின் கைதிகளை விடுதலை செய்த போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் ஒரு பெண் கைதியை உடனடியாக விடுதலை செய்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹுதைஃபா (ரலி) அவர்களிடம் நயவஞ்சகர்களின் ஒரு குழுவின் பெயர்களைச் சொல்லி, 'இந்த நபர்களின் ஜனாஸா தொழுவதை விட்டும் நான் தடுக்கப்பட்டுள்ளேன்' என்று கூறினார்கள். ஆக, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது கிலாஃபத் காலத்தில், எவருடைய ஜனாஸாவை ஹஸ்ரத் ஹுதைஃபா (ரலி) அவர்கள்

தொழுகிறார்களோ அவருடைய ஜனாஸா தொழுகையை மட்டுமே நிறைவேற்றுவார்கள். மாறுபடும் சூழலில் அந்த நபருடைய ஜனாஸா தொழுகையைத் தொழாமல் கைவிட்டுவிடுவார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பை வெளிப்படையாக நிறைவேற்றுவதற்காக கிஸ்ரா பேரரசனின் காப்பை ஒரு சஹாபிக்கு அணிவித்து விட்டார்கள். ஹஸ்ரத் ஸைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் சாஹிப் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு கனவைச் சான்றாகக் கொண்டு இவ்வாறு பொருளுரைக்கிறார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மூலம் முஸ்லிம்களுக்குக் கிடைக்கப்பெற்ற உலக வெற்றிகளும் மகத்துவங்களும் நபித்துவ அறிவின் எஞ்சிய ஒரு பகுதியாக இருந்தது. அது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து கிடைத்திருந்தது.

ஹஸ்ரத் மாலிக் பின் இக்வால் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: உங்களைக் கணக்கிடப்படுவதற்கு முன்பு நீங்கள் உங்களைக் கணக்கிட்டுக் கொள்ளுங்கள். உங்களை அளந்து பார்க்கப்படுவதற்கு முன்பு நீங்கள் உங்கள் ஆன்மாவை அளந்து பார்த்துக் கொள்ளுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக பெரிய முன்னிருத்தப்படுதலுக்காக ஆயத்தம் மேற்கொள்ளுங்கள். ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை அன்னார் அமீருல் முஃமினீனாக (நம்பிக்கை கொண்டவர்களுக்குத் தலைவராக) இருக்கும் போது, அன்னாருடைய மேலாடையில் தோள்களுக்கு நடுவில் தோலால் ஆன நான்கு ஒட்டுகள் போடப்பட்டிருப்பதைப் பார்த்தேன்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இந்தக் குறிப்பு இனிவருங்காலங்களிலும் தொடரும். இன் ஷா அல்லாஹ்!

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இறுதியில், ரப்வாவின் ஃபஸ்லே உமர் மருத்துவமனையின் மருத்துவர் மதிப்பிற்குரிய தாஸீர் முஜ்தபா சாஹிப் அவர்களின் வஃபாத்தை ஒட்டி அவர்களின் நற்குறிப்பை எடுத்துரைத்தவாறு அவர்களின் ஜமாஅத்து தொண்டுகளைப் பற்றியும் கூறினார்கள். மேலும், ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللهُ فَلاَ مُضِلَّ لَهُ وَمَنْ يُّضْلِلْهُ فَلاَ هَادِىَ لَهُ وَنَشْهَدُ أَنْ لَآ اِلٰهَ اِلاَّ اللهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ الله رحمكم الله اِنَّ اللهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மௌலவி அத்தாவுல் முஃக்னி)